# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 194/மா/2025
நாள் 10.04.2026

B. அய்யப்பராஜா
திருப்பூர் --- முறையீட்டு மனுதாரர்

(1) ஆணையாளர்
திருப்பூர் மாநகராட்சி, திருப்பூர்
(2) உரிமையாளர்,
திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டபம்
திருப்பூர். --- எதிர்மனுதாரர்கள்

திருப்பூர், லட்சுமி நகர் (PO), P.N. ரோடு, S.V காலனி, 2வது வீதி, பழைய எண்.24/புதிய எண்.35 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B.அய்யப்பராஜா என்பவரின் 23.05.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.05.2025 அன்று பெறப்பட்டு 194/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருப்பூர், லட்சுமி நகர் (PO), P.N. ரோடு, S.V காலனி, 2வது வீதி, பழைய எண்.24/புதிய எண்.35 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B.அய்யப்பராஜா என்பவர் 23.05.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"குற்றச்சாட்டின் பொருண்மைகள்:

முறையீட்டாளர் ஆகிய நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். இப்பவும், திருப்பூர் மாவட்டம், திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் 1ல் சட்ட விதிகளுக்கு புறம்பாக செயல்பாட்டில் இருந்து வரும் "திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டபம்"–த்திற்கு மாநகராட்சியினால் வழங்கப்பட்ட உரிமம் தொடர்பாக கடந்த 27.10.2024–ம் தேதியில் மனு ஒன்றினை திருப்பூர் மாநகராட்சியின் ஆணையருக்கும் அதன் நகல்களை சம்பந்தப்பட்ட உயர்அலுவலகத்திற்கும் அனுப்பி வைத்திருந்தேன். மேற்படி மனுவின் பேரில் எந்தவொரு தகவலும் வராத நிலையில், கடந்த 16.12.2024ம் தேதியில் நினைவூட்டு கடிதம் ஒன்றினை திருப்பூர் மாநகராட்சியின் ஆணையருக்கு அனுப்பி வைத்திருந்தேன். மேற்படி மனுவின் பேரில் மண்டல உதவி ஆணையாளர் அவர்கள் கடந்த 03.01.2025ம் தேதியிட்டு (ந.க. எண் எப்1/3475/2024/ம.1 நாள் 03.01.2025) மேற்படி திருமண மண்டபம் தொடர்பாக மனுதாரர் கோரிய தகவல்களுக்கு அதன் ஒரு சில கேள்விகளுக்கான தகவல்களை மட்டும் மனுதாரராகிய எனக்கு சார்பு செய்திருந்தார். அவர் கொடுத்த தகவலானது மிகுந்த அதிர்ச்சியூட்டும் விதமாக இருந்தது. அதனை தொடர்ந்து மேற்படி முறைகேடாக இயங்கி வரும் மேற்படி திருமண மண்டபத்தின் பேரில் உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமாய் கடந்த 11.02.2025–ம் தேதியில் மனு ஒன்றினை நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறையின் முதன்மை செயலாளருக்கும் அதன் நகல்கள் சம்பந்தப்பட்ட

அலுவலகத்திற்கும் அனுப்பி வைத்திருந்தேன். மேற்படி மனுவின் பேரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து மாநகராட்சி ஆணையாளருக்கு எனது மனுவின் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கடந்த 28.02.2025ம் தேதியிட்டு (ஓ.மு. எண் 3271/2025/உ.1 நாள் 28.02.2025) கடிதம் ஒன்றினை திருப்பூர் மாநகராட்சியின் ஆணையருக்கும் அதன் நகலானது மனுதாரராகிய எனக்கும் சார்வு செய்யப்பட்டது. இந்நிலையில் எனது மனுவின் பேரில் எந்தவொரு சட்ட நடவடிக்கைகளும் எடுக்காமல் சுணக்கமாக இருந்து வரும் மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு கடந்த 14.04.2025ம் தேதியில் மேற்படி திருமண மண்டபத்தின் பேரில் எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அதன் நகல்கள் கோரி மாநகராட்சியின் ஆணையருக்கு மனு ஒன்றினை அனுப்பியிருந்தேன். மேற்படி மனுவின் நகலினை மேற்படி மண்டல உதவி ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்திருந்தேன். ஆனால், இதுநாள் எந்தவொரு சட்ட நடவடிக்கைகளும் மேற்படி திருமண மண்டபத்தின் பேரில் எடுக்கப்பட்டதாக மனுதாரராகிய எனக்கு தகவல் ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

எனவே சமூகம் அவர்கள் இம்மனுவினை ஏற்று, கருணையுடன் பரிசீலனை செய்து மேற்படி நாட்டில் அமலிலுள்ள சட்டவிதிகளுக்கு புறம்பாக இன்றளவும் செயல்பாட்டில் இருந்து வரும் மேற்படி “திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டபம்”–ன் பேரில் உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்க மாநகராட்சி ஆணையாளருக்கு தகுந்த உத்திரவிடுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திடம் தாழ்மையுடன் வேண்டுகிறேன்.” என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 16.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருப்பூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் தனது 07.07.2025 மற்றும் 30.12.2025 நாளிட்ட கடிதங்கள் ந.க. எண் எப்1/3475/2024/ம.1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளார். அதில்–

<u>07.07.2025 நாளிட்ட அறிக்கையில்</u>

“திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் 1, வார்டு எண்.22க்குட்பட்ட பிச்சம்பாளையம் இட்டேரி ரோட்டில் உள்ள திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டபம் கட்டிடம் தொடர்பான விவரங்கள் வழங்கக் கோரி மனுதாரர் மனு அளிக்கப்பட்டதன் பேரில், திருப்பூர் மாநகராட்சி அலுவலக 03.01.2025 நாளிட்ட கடிதத்தில் திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டபம் சுமார் 40 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடம் ஆனதால், இக்கட்டிடத்தின் கட்டிட அனுமதி தொடர்பான விவரங்கள் DTCP உரிமம் மற்றும் இடத்தின் விஸ்தீரணம், சர்வே எண் ஆகிய விவரங்கள் இவ்வலுவலகத்தில் இல்லை என்கிற விவரமும், மேற்படி திருமண மண்டபத்தின் குடிநீர் வரி சம்பந்தப்பட்ட மாநகராட்சி கணினி நகல்களும், மேலும், மேற்படி கட்டிடத்தின் மின் இணைப்பு தொடர்பாக விபரம் தெரிவிக்க மனுதாரரது விண்ணப்ப நகலை தமிழ்நாடு மின்சார வாரியம், திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது என்ற விவரமும் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாநகராட்சிஅலுவலக 24.02.2025 நாளிட்ட அலுவல் சார்பு குறிப்பு மூலமாக அலுவலர்களுக்கு குறிப்பு அனுப்பப்பட்டு கட்டிடம் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கீழ்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டபம் சுமார் 40 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடமாதலால் திருப்பூர் மாநகராட்சி 12.05.2025 நாளிட்ட கடிதத்தின்படி, கட்டிடம் கட்டுவதற்கு பெறப்பட்ட கட்டிட உரிமம் ஆணை, வரைபட அனுமதி, மனை வரன்முறை செய்யப்பட்ட உத்தரவு மற்றும் இடத்திற்குண்டான பத்திரம் மற்றும் மூலப்பத்திரம் நகல்களை சமர்ப்பிக்க தெரிவித்து அறிவிப்பு கடிதம் கட்டிட உரிமையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. நாளது தேதி வரை விபரங்கள் கட்டிட

உரிமையாளரால் வழங்கப்படவில்லை. எனவே தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டபத்திற்கான தொழில் உரிமம் 01.04.2023 முதல் 31.03.2026 வரை தொழில் உரிமம் எண்.032/2022/01/008/0000670–ன்படி விதிக்கப்பட்டு 12.03.2025 அன்று தொகை ரூ.5000/– வசூலிக்கப்பட்டு மாநகராட்சிக்கு வரவாக்கப்பட்டுள்ளது.

திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டபத்திற்கு தொழில்வரி வரி விதிப்பு எண்.032/022/900700–ன்படி தொழில் வரி விதிக்கப்பட்டு 2022–2023–ஆம் ஆண்டு முதல் அரையாண்டு முதல், 2024–2025–ஆம் ஆண்டு இரண்டாம் அரையாண்டு வரை ஒரு அரையாண்டிற்கு ரூ.1245/– வீதம் 6 அரையாண்டிற்கு ரூ.7470/– வசூக்கப்பட்டு திருப்பூர் மாநகராட்சி கணக்கில் 30.04.2025 அன்று வரவு வைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு திரு. B.அய்யப்பராஜா என்பவரால் கோரிய விபரங்களில் தொழில் உரிமக் கட்டணம், தொழில் வரி ஆகியவை மேற்படி கட்டிடத்திற்கு விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டும், கட்டிடம் 40 ஆண்டுகளுக்கு முற்பட்டதால் கட்டிட உரிமம் குறித்து அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்காணும் தகவல்கள் மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் கனிவான பரிசீலனைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

<u>30.12.2025 நாளிட்ட அறிக்கையில்</u>

திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் 1, வார்டு எண்.22க்குட்பட்ட பிச்சம்பாளையம் இட்டேரி ரோட்டில் உள்ள திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டபம் கட்டிடம் தொடர்பான விவரங்கள் வழங்கக் கோரி மனுதாரர் மனு அளிக்கப்பட்டதன் பேரில், திருப்பூர் மாநகராட்சி அலுவலக 03.01.2025 நாளிட்ட கடிதத்தில் திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டபம் சுமார் 40 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடம் ஆனதால், இக்கட்டிடத்தின் கட்டிட அனுமதி தொடர்பான விவரங்கள் DTCP உரிமம் மற்றும் இடத்தின் விஸ்தீரணம், சர்வே எண் ஆகிய விவரங்கள் இவ்வலுவலகத்தில் இல்லை என்கிற விவரமும், மேற்படி திருமண மண்டபத்தின் குடிநீர் வரி சம்பந்தப்பட்ட மாநகராட்சி கணினி நகல்களும், மேலும், மேற்படி கட்டிடத்தின் மின் இணைப்பு தொடர்பாக விபரம் தெரிவிக்க மனுதாரரது விண்ணப்ப நகலை தமிழ்நாடு மின்சார வாரியம், திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது என்ற விவரமும் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாநகராட்சி அலுவலக 24.02.2025 நாளிட்ட அலுவல் சார்பு குறிப்பு மூலமாக சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு குறிப்பு அனுப்பப்பட்டு கட்டிடம் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கீழ்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டபம் சுமார் 40 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடமாதலால் திருப்பூர் மாநகராட்சி 12.05.2025 நாளிட்ட கடிதத்தின்படி, கட்டிடம் கட்டுவதற்கு பெறப்பட்ட கட்டிட உரிமம் ஆணை, வரைபட அனுமதி, மனை வரன்முறை செய்யப்பட்ட உத்தரவு மற்றும் இடத்திற்குண்டான பத்திரம் மற்றும் மூலப்பத்திரம் நகல்களை சமர்ப்பிக்க தெரிவித்து அறிவிப்பு கடிதம் கட்டிட உரிமையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. நாளது தேதி வரை விபரங்கள் கட்டிட உரிமையாளரால் வழங்கப்படவில்லை. எனவே தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டபத்திற்கான தொழில் உரிமம் 01.04.2023 முதல் 31.03.2026 வரை தொழில் உரிமம் எண்032/2022/01/008/0000670–ன்படி விதிக்கப்பட்டு 12.03.2025 அன்று தொகை ரூ.5000/– வசூலிக்கப்பட்டு மாநகராட்சிக்கு வரவாக்கப்பட்டுள்ளது. மேலும், தொழில்வரி வரி விதிப்பு எண்.032/022/900700–ன்படி தொழில் வரி விதிக்கப்பட்டு 2022–2023–ஆம் ஆண்டு முதல் அரையாண்டு முதல், 2024–2025–ஆம் ஆண்டு இரண்டாம்

அரையாண்டு வரை ஒரு அரையாண்டிற்கு ரூ.1245/– வீதம் 6 அரையாண்டிற்கு ரூ.7470/– வசூக்கப்பட்டு திருப்பூர் மாநகராட்சி கணக்கில் 30.04.2025 அன்று வரவாக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு திரு. B.அய்யப்பராஜா என்பவரால் கோரிய விபரங்களில் தொழில் உரிமக் கட்டணம், தொழில் வரி ஆகியவை மேற்படி கட்டிடத்திற்கு விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டும், கட்டிடம் 40 ஆண்டுகளுக்கு முற்பட்டதால் கட்டிட உரிமம் குறித்து அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதை தெரிவித்து அதற்கான கடித நகல்கள் அனுப்பி வைக்கப்பட்டது.

24.12.2025 நாளிட்ட திருப்பூர் மாநகராட்சி அலுவலக கடிதத்தின்படி, திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டபத்திற்கு கட்டிட உரிமம் ஆணை, வரைபட அனுமதி, மனை வரன்முறை செய்யப்பட்ட உத்தரவு ஆவணங்கள் நகல்களை சமர்ப்பிக்க தெரிவித்து மீண்டும் அறிவிப்பு கடிதம் கட்டிட உரிமையாளருக்கு அனுப்பப்பட்டது. கடிதத்திற்கு, 30.12.2025 நாளிட்ட திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டப உரிமையாளர் திரு. K. ராமச்சந்திரன் என்பவரின் கடிதத்தின்படி, மேற்படி மண்டபமானது இவரது தந்தையார் திரு. கிருஷ்ணன் அவர்களால் 1960 ஆம் ஆண்டு வாங்கப்பட்டது என்றும், அதன் பின்னர் சுமார் ஐந்து ஆண்டுகள் கழித்து 1965ம் வருடத்தில் அந்த இடத்தில் நூல்களுக்கு சாயம் மற்றும் சலவை செய்யும் தொழிற்சாலை அமைப்பதற்காக 64 அடி நீளம் 32 அடி அகலம் கொண்ட சுமார் 2048 சதுரடி கொண்ட கருங்கற்களால் ஆன சுவர்களையும் ஓடுகளால் வேயப்பட்ட கூரையும் கொண்டு ஒரு கட்டிடத்தை கட்டி தொழில் செய்து வந்தார். இப்பகுதி தொட்டிபாளையத்தை சார்ந்தது என்றும், அப்பகுதியில் இக்கட்டிடம் பெரியது என்பதால், ஏழைகளின் குழந்தைகளுக்கு திருமணத்தை இந்த சாயப்பட்டறையில் நடத்தி வந்தனர். அப்போது தொழில் சரிந்ததால் அந்த கட்டிடத்தை பூட்டி வைத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

பின்னர் தனது தாயாரின் நினைவாக இலவச திருமணங்கள் நடத்துவதற்காக மண்டபமாக மாற்றம் செய்யப்பட்டதாகவும், தனது தாயார் அவர்கள் காலமாகிவிட்டதாலும், தான் வேறு மாவட்டங்களில் பணியாற்றிக் கொண்டிருந்த காரணத்தினாலும் சரியாக கவனிக்க முடியவில்லை என்றும், தற்போது ஓய்வு பெற்ற நிலையில் மண்டபத்தை ஏற்று நடத்த வேண்டும் என்று முடிவு செய்து புனரமைத்து ஓடுகளை அகற்றிவிட்டு அதற்கு பதிலாக தகர சீட்டுகளை அமைத்து 2022–ம் ஆண்டு முதல் தற்போது வரை கடந்த 3 ஆண்டுகளாக நிர்வகித்து வருவதாகவும், அதற்கான சொத்துவரி விதிப்பு எண் 032/022/903628க்கான ஆண்டு வரித் தொகை ரூ.16,704/– நாள் 11.08.2025ம் தேதி செலுத்தப்பட்ட ரசீது நகல் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தனது தந்தையார் காலத்தில் அவர் பெற்ற அனுமதி கடிதம் அரசாங்கத்துக்கு செலுத்திய வரிகள் கட்டணங்கள் போன்ற விபரங்கள் இல்லை என்றும், கட்டிடம் 60 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டதால் கட்டிட வரைபடம், வரைபட ஒப்புதல், கட்டிட அனுமதி போன்ற விபரங்கள் தெரியவில்லை என்றும், தற்போது தான் பெற்ற அனுமதி கடிதங்கள் மற்றும் செலுத்திய வரிகள் கட்டணங்கள் ஆகியவற்றின் நகல்கள் அளித்துள்ளதாகவும், தான் செலுத்த வேண்டிய வரிகள் ஏதாவது கட்ட வேண்டியிருந்தால் செலுத்தி விடுவதாகவும் தெரிவித்து, தற்போது, மேற்படி கட்டிடத்திற்கு உரிய சொத்துவரி, குடிநீர் வரி, தொழில் உரிமம் ஆகியவற்றிற்கான கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது மற்றும் சுகாதார சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது எனவும், கட்டிடத்தின் புகைப்பட நகல் இணைத்துள்ளார்.

மேற்காணும் தகவல்கள் மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் கனிவான பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.". எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 06.01.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 09.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 06.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை. இவ்வாறு ஆஜராகாமல் இருப்பது ஏற்புடையதன்று.

6. எதிர் மனுதாரர் சார்பில் திருப்பூர் மாநகராட்சி உதவி ஆணையர் 06.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் 1, வார்டு எண்.22க்குட்பட்ட பிச்சபாளையம் இட்டேரி ரோட்டில் உள்ள திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டபம் கட்டிடம் சுமார் 40 வருடங்கள் முன்பு கட்டப்பட்ட கட்டிடம். மேலும், இக்கட்டிடத்தின் கட்டிட அனுமதி தொடர்பான விவரங்கள், DTCP உரிமம் மற்றும் இடத்தின் விஸ்தீரணம், சர்வே எண். ஆகியவை இவ்வலுவலகத்தில் இல்லை.

கட்டிடம் கட்டுவதற்கு பெறப்பட்ட கட்டிட உரிமம் ஆணை, வரைபட அனுமதி, மனை வரன்முறை செய்யப்பட்ட உத்தரவு மற்றும் இடத்திற்குண்டான பத்திரம், மூலப்பத்திரம் நகல்களை சமர்ப்பிக்க தெரிவித்து அறிவிப்பு கடிதம் கட்டிட உரிமையாளருக்கு அனுப்பப்பட்டது. ஆனால் வரைபட அனுமதி உட்பட மற்ற ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கவில்லை கட்டிட உரிமையாளர் கல்யாண மண்டபம் நடத்துவதற்கான 01/04/2023 முதல் 31/03/2026 வரையிலான தொழில் உரிமம் சமர்ப்பித்துள்ளார்.

திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டபத்திற்கு தொழில்வரி வரி விதிப்பு எண்.032/022/900700-ன்படி தொழில் வரி விதிக்கப்பட்டு 2022-2023-ஆம் ஆண்டு முதல் அரையாண்டு முதல், 2024-2025-ஆம் ஆண்டு இரண்டாம் அரையாண்டு வரை ஒரு அரையாண்டிற்கு ரூ.1245/- வீதம் 6 அரையாண்டிற்கு ரூ.7470/- வசூக்கப்பட்டு திருப்பூர் மாநகராட்சி கணக்கில் 30.04.2025 அன்று வரவு வைக்கப்பட்டுள்ளது.

கட்டிட உரிமையாளர் மற்ற ஆவணங்கள் சமர்ப்பிக்காத நிலையில் கட்டிடம் தொடர்பாக தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (திருத்தப்பட்டது) பிரிவு 133, 134 மற்றும் 135ன் கீழ் உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

7. இரண்டாம் எதிர்மனுதாரரான திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டபத்தின் உரிமையாளர் சார்பாக வழக்கறிஞர் 06.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது எழுத்து மூலமான வாக்குமூலம் (Affidavit) மற்றும் பதில் அறிக்கை (Written Statement) ஆகியவற்றை சமர்ப்பித்துள்ளார்:-

"**Affidavit:**

I, Dr. K. Ramachandran, S/o Krishnan, the owner of Thirumathi Kasthuri Ammal Thirumana Mandapam, situated at 25/13, Pitchampalayam, Itteri Road, Behind Sivan Theatre, Tiruppur District-641 602; do hereby solemnly affirm and sincerely state as follows:-

1) I am the deponent herein / 2nd respondent in the above complaint filed by the 1st respondent herein against me and the 2nd respondent seeking to issue an appropriate direction to the 2nd respondent to take necessary action against said Thirumanamandapam.

2) The averments that I made in the Written Statement may kindly be treated as part and parcel of this affidavit.

3) To substantiate my contention that, an Interlocutory application in the above Complaint is very well maintainable. I drew the attention of this Hon'ble forum to section 8 of the Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014 which vests this Hon'ble forum with all the powers of a civil court trying a suit under Code of Civil Procedure 1908.

4) I most humbly submit that, as per the scheme of the Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014 (hereinafter referred to as the Act), the inclusion of my name / Establishment, who is neither an elected member of local body or officers attached therewith but an establishment, as one of the party to the above complaint at the instance of the 1st herein is not at all maintainable and also not necessary. Considering the nature of the relief (to issue direction to the 2nd respondent to take necessary action against said Thirumanamandam) sought by the 1st respondent / complainant, there is no requirement for me / Thirumana Mandapam to be arrayed as formal parties.

5) The section 2 (3) of the said Act which defines the term 'Complaint' reads as **"complaint" means a statement of allegation that a public servant or a local body is guilty of corruption or maladministration and includes any reference to an allegation in respect of which suo-motu enquiry has been proposed or recommendation for enquiry has been made by the Government;** which makes it clear that the complaint against any Individual, Association, Private Establishment or others, not being the public servant within the meaning of the said act, is not at all maintainable in the eye of law. And so this Hon'ble forum has no powers / jurisdiction to pass an effctive order against me/establishment as enumerated under section 12 of the said Act which pertains to Disposal of the Complaints.

6) Hence, presence / array as one of the party of me / establishment in the above complaint is unwarranted in its entirety, unsustainable in the eye of law and not within the Jurisdiction of this Hon'ble Forum which necessitates me to seek for my exoneration from the above complaint.

7) Unless this, Hon'ble court has to pass an order to exonerate me / establishment from the above complaint I would be put into untold loss and hardship which cannot be compensated by any money value. Further, none of the respondents are going to be prejudiced by mere exoneration of me / the Establishment from the above complaint.

It is therefore just and necessary that, this Hon'ble Forum may kindly be pleased to pass an order to exonerate me / the Establishment (arrayed as 2nd respondent) from the above Complaint and pass suitable orders.

**Written Statement – dated 05.01.2026:**

1) The respondent herein hereby denies each and every one of the averments/allegations stated by the complainant in the complaint is false, baseless, incorrect and unsustainable both in law and on the facts of the case, except those that are expressly admitted by the respondent herein.

2) The respondent herein reserves his right to file additional written statement if necessity arises.

3) The respondent herein most humbly submits that, he had filed a separate application / petition to exonerate him from the above complaint as this Hon'ble forum has no jurisdiction as per the Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014 to take cognizance of any complaint against any persons not being the elected local body or persons connected therewith. Moreover as regards the averments pertaining to the representations of the petitioner to the 1st respondent and others and the allegations of inaction on their part, the entire burden is on the petitioner to prove the same in the manner known to law.

4) The respondent herein again submits that, as per the sale deed of the year 1960 originally the property admeasuing approximately 2.47 acres in which the Kalyanamandapam is now situated belonged to one Krishnan who is none other than the father of the present owner Dr. K. Ramachandran. He was in effective possession and enjoyment of the same without any hindrance from others since then.

5) Further, the said Krishnan during 1965 started running dyeing business in the subject property and he cared to help the peoples in this community (Hindu Devanga Chettiyar) which is identified as Most Backward Class and as well as indigent persons in and around the area of Thottipalayam village by allowing them to use the vacant space in the subject proeprty for Ear piercing ceremony, Baby showering ceremony, Betrothal and for Dining purposes in a Marriages at free of cost or after collecting meager amount from them.

6) Thereafter, in the year 2000 he left dyeing business and moved to the manufacturing of cotton hosiery garments under the name and style as "Sri Krishna Garments" and registered himself as Small Scale Industry with the District Industries Centre at Coimbatore vide registration number 18 / 04 / 99080 / Prov / SSI and continued to do the charity work of him to the people with service motive in. Subsequent to the demise of his wife named Kasthuri Ammal, the said Krishnan pursued the above said service under the name of Thirumathi Kasthuri Ammal Thirumanamandapam, in memory of his beloved wife and even complied with all the statutory mandates.

7) Subsequent to the demise of the said Krishnan in the year 2013, the respondents herein had, inter alia, inherited the subject property, however the administration of the said Mandapam was stalled for a considerable period of time. The respondent herein was unable to effectively manage the Mandapam as he confronted with several transfers being senior veterinary officer who was designated as Joint Director of Animal Husbandry Government Verterinary hospital.

8) Thereafter, subsequent to his superannuation / retirement, particularly after 2020 he took over the management of the said mandapam and is properly administering the same by complying with all the necessary statutory requirements from the concerned departments and some of the available records such as License issued by the 1st Respondent Corporation vide No.032/2022/01/008/0000670 dated 16/03/2022 (renewed periodically); Sanitary Certificate vide Ref. No. H1/003852/2025 dated 08.05.2025; Property Tax receipt vide Assessment No. 032/022/903628; Professional Tax receipt vide Assessment No. 032/022/900700; Underground Drainage Tax receipt vide Connection No. 032/022/903628. This respondent has also obtained Fire Licence from the Tamil Nadu Fire and Rescue Services vide No.0814/FL/NMSB/2025 dated 24.04.2025 could be produced if required.

9) As such the subject property under the (8 years) management of this respondent is peacefully doing the service to the public within his power as far as practicable for the past more than 40 years. And so, in view of the statutory bar under section 10(3)(c) as more than 5 years have been lapsed from the date of alleged occurrence of deviation / violation in respect the said Mandapam this forum could not proceed enquiry into the instant petition.

10) Furthermore, apparently subsequent to the direction of the District Collector, the 1st respondent, over the allegations of violation, have also served

this respondent with notice dated 12/05/2025 to cause production of certain documents pertaining to the said Thirumana Mandapam to which the respondent herein has complied with and proven the genuinety of the building. As such, the prayer that has been made in the instant complaint has become infructuous. Further, arraying this repondent as one of the party notwithstanding the fact that, no relief has been claimed against him, is nothing but an intimidating stunt.

11) The above submissions of the respondent therefore makes it clear that, the petitioner herein, who is in no way connected to the said Mandapam under the grab of activism is trying to extort money and whoever fails to comply is making all kinds of efforts to concede the victims. Hence, the illegal attempt of the petitioner to defeat and defraud this respondent should not be allowed to continue.

12) The instant petition is not at all maintainable as against the individual / respondent and ought not be numbered, ordered to be summoned and be expected to face the enquiry / trial and hence it is devoid of merits, abuse of process of law which has to be dismissed in limine.

13) Further, this respondent herein most humbly submits that, as framing of the case against him itself is not correct and against law this repsondent is not duty bound to defend the case by producing any of the documents. Subject to the outcome of the Exoneration petition filed along with this Written Statement and if this Forum decides to proceed with the case against the individual / respondent who is neither an elected local body nor officers attached with it, he is ready to produce the same with a view to contest the same.

14)Therefore, this respondent herein most humbly prays that, this Hon'ble forum may kindly be pleased to dismiss the above petition as against the 2nd respondent with exemplary cost and render justice."

8. மனுதாரரின் மனு, எதிர்மனுதாரரான திருப்பூர் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கைகள் மற்றும் உதவி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரான திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டபத்தின் உரிமையாளர் சார்பாக ஆஜரான வழக்கறிஞர் சமர்ப்பித்துள்ள எழுத்துப்பூர்வமான வாக்குமூலம் (Affidavit) மற்றும் எழுத்துபூர்வமான பதில் அறிக்கை (Written Statement) ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் 1ல், பிச்சம்பாளையம், இட்டேரி மெயின் ரோட்டில் உள்ள "திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டபம்" கட்டிட அனுமதி மற்றும் மண்டபம் நடத்துவதற்கான உரிமம் ஆகியவற்றை மாநகராட்சியிடமிருந்து பெறாமல் இயங்கி வருவதால், உரிய நடவடிக்கை எடுக்க திருப்பூர் மாநகராட்சி ஆணையாளருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனுவிலிருந்து அறிய முடிகிறது.

திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் 1, வார்டு எண்.22க்குட்பட்ட பிச்சம்பாளையம் இட்டேரி ரோட்டில் உள்ள "திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டபம்" கட்டிடம் சுமார் 40 வருடங்கள் முன்பு கட்டப்பட்ட கட்டிடம் என்பதால், கட்டிட அனுமதி தொடர்பான விவரங்கள், DTCP உரிமம் மற்றும் இடத்தின் விஸ்தீரணம், சர்வே எண் ஆகியவை திருப்பூர் மாநகராட்சியில் இல்லை என்பதும், எனவே, கட்டிடம் கட்டுவதற்கு பெறப்பட்ட கட்டிட உரிமம் ஆணை, வரைபட அனுமதி, மனை வரன்முறை செய்யப்பட்ட உத்தரவு மற்றும் இடத்திற்குண்டான பத்திரம், மூலப்பத்திரம் நகல்களை சமர்ப்பிக்க தெரிவித்து அறிவிப்பு கடிதம் கட்டிட உரிமையாளருக்கு அனுப்பப்பட்டும், எவ்வித ஆவணங்களும் உரிமையாளரால் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதும், மேற்கண்ட திருமண மண்டபம் நடத்துவதற்கு 01/04/2023 முதல் 31/03/2026 வரையிலான தொழில் உரிமம்

சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், இத்திருமண மண்டபத்திற்கு தொழில்வரி வரி விதிக்கப்பட்டு 2022–2023–ஆம் ஆண்டு, முதல் அரையாண்டு முதல் 2024–2025–ஆம் ஆண்டு, இரண்டாம் அரையாண்டு வரை ஒரு அரையாண்டிற்கு ரூ.1245/– வீதம் 6 அரையாண்டிற்கு ரூ.7470/– வசூலிக்கப்பட்டுள்ளது என்பதும், கட்டிட உரிமையாளர் மற்ற ஆவணங்கள் சமர்ப்பிக்காத நிலையில் கட்டிடம் தொடர்பாக தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்டது) பிரிவு 133, 134 மற்றும் 135ன் கீழ் உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் எதிர்மனுதாரான திருப்பூர் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி ஆணையரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் 1, வார்டு எண்.22க்குட்பட்ட பிச்சம்பாளையம் இட்டேரி ரோட்டில் உள்ள "திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டபம்" வாரிசு என்ற அடிப்படையில் தனது தந்தையார் திரு. கிருஷ்ணன் அவர்களிடமிருந்து கிடைக்கப்பட்ட இடம் என்பதும், இம்மண்டபத்தை நடத்துவதற்கான உரிமம் திருப்பூர் மாநகராட்சியிடமிருந்து பெறப்பட்டுள்ளது என்பதும், சொத்து வரி, தொழில் வரி மற்றும் கழிவுநீருக்கான வரி ஆகியவை இந்நாள் வரை மாநகராட்சிக்கு செலுத்தப்பட்டு வருகிறது என்பதும், மனுதாரர் காழ்ப்புணர்ச்சி கொண்டு அளித்த இம்மனு தேவையில்லாதது மற்றும் திருமண மண்டப உரிமையாளரை பயமுறுத்துவதற்கானது என்பதும், மேற்கண்ட திருமண உரிமையாளரை எதிர்மனுதாரராக அழைக்க தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம், 2014, பிரிவு 2–ன்படி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் அதிகார வரம்பிற்கு (jurisdiction) வராது என்று தெரிவித்தும், மேலும் Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014 under section 10 (3 (c)-ன்படி மனுதாரர் குறிப்பிட்ட புகார் ஐந்து வருடங்களுக்கு மேலாகும் என்பதால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் வரம்பிற்குள் வராது என்று தெரிவித்தும் திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டப உரிமையாளரை இவ்வழக்கிலிருந்து விடுவிக்கும்படியும் கோரியிருப்பது, இரண்டாம் எதிர்மனுதாரரான திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டப உரிமையாளர் சார்பாக ஆஜரான வழக்கறிஞரின் எழுத்துப்பூர்வமான வாக்குமூலம் (Affidavit) மற்றும் பதில் அறிக்கை (Written Statement) ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் 1, வார்டு எண்.22க்குட்பட்ட பிச்சம்பாளையம் இட்டேரி ரோட்டில் உள்ள திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டபம் தொடர்பாக,

(அ) The Limitation Act, 1963, Section 22–ல்

> "22. Continuing breaches and torts.- In the case of a continuing breach of contract or in the case of a continuing tort, a fresh period of limitation begins to run at every moment of the time during which the breach or the tort, as the case may be, continues."

என்று குறிப்பிட்டுள்ளதனாலும்.

(ஆ) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம், 2014, பிரிவு 8(1) (a)–வில் முறைமன்ற நடுவருக்கு முறையீட்டாளரை அல்லது சாட்சி அளிப்பவர்களை வருகை தருமாறு அழைப்பதற்கு மற்றும் கட்டாயப்படுத்துவதற்கு மற்றும் அவரை உறுதிமொழியின் பேரில் விசாரிப்பதற்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின் அடிப்படையிலும் மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண் W.P.No.30708/2019, 07.02.2022 நாளிட்ட தீர்ப்பில் மூன்றாம் தரப்பினருக்கு வாய்ப்பு அளிக்கப்படாமல் வெளியிடப்பட்ட ஆணை சட்டப்படி செல்லத்தக்க தல்ல (non est in law) அடிப்படையில் இரண்டாம் எதிர்மனுதாரர் விசாரணைக்கு அழைக்கப்பட்ட காரணத்தாலும் ;

இம்முறைமன்ற நடுவத்தின் அதிகார வரம்பிற்குள் இப்புகார் உள்ளதெனவும், இரண்டாம் மனுதாரரை விசாரிப்பதற்கு இம்முறைமன்ற நடுவத்திற்கு சட்டபூர்வ அதிகாரம் உள்ளதென தீர்மானிக்கப்படுகிறது.

எனவே, திருப்பூர் மாநகராட்சியில் கோரப்பட்ட ஆவணங்களை மேற்கண்ட திருமண மண்டபத்தின் உரிமையாளர் சமர்ப்பிக்காத நிலையில், இக்கட்டிடம் தொடர்பாக தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்டது) பிரிவு 133, 134 மற்றும் 135ன் கீழ் உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எதிர்மனுதாரர் தரப்பில் திருப்பூர் மாநகராட்சி உதவி ஆணையர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 படியும், அரசு மற்றும் மாண்பமை உயர்நீதிமன்றங்கள் மற்றும் உச்ச நீதி மன்றம் வழங்கியுள்ள வழிகாட்டுதல்களின்படியும், உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திருப்பூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. M B.அய்யப்பராஜா,
பழைய எண்.24/புதிய எண்.35,
2வது வீதி, S.V காலனி,
P.N. ரோடு, லட்சுமி நகர் (PO),
திருப்பூர் –641 602.

(2) உரிமையாளர்,
திருமதி கஸ்தூரி அம்மாள் திருமண மண்டபம்,
25/13, பிச்சம்பாளையம் இட்டேரி ரோடு,
சிவன் தியேட்டர் பின்புறம்,
திருப்பூர்–641 602.

(3) ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர்.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரிகள்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

15/4/26
செயலாளர்.

15/4/26